

# ஸ்ரீகுருஜியும் தேசியமும்



மா.கோ. வைத்ய

ஸ்ரீகுருஜியும் தேசியமும்



மா.கோ. வைத்ய

## இந்த நூல்....

ஸ்ரீகுருஜி நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இத்தருணத்தில் முக்கியமான பல்வேறு விஷயங்களை பற்றிய ஸ்ரீகுருஜியின் சிந்தனைகள் அனைத்து மக்களையும் சென்று சேரவேண்டும் என்பதற்காக பல சிறு நூல்களை வெளியிடுகிறோம். அந்த வரிசையில் 'ஸ்ரீ குருஜியும் தேசியமும்' என்ற இந்த நூல் வெளியிடப்படுகிறது.

ஆர்.எஸ்.எஸ் அகில பாரத செயற்குழுவின் விசேஷ அழைப்பாளரான திரு.மா.கோ.வைத்ய இந்த சிறு நூலை தொகுத்தளித்துள்ளார்.

ஸ்ரீகுருஜியின் சொற்பொழிவுகள், கட்டுரைகள், கடிதங்கள், கலந்துரையாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு 'ஸ்ரீகுருஜி சிந்தனை களஞ்சியம்' என்ற பெயரில் 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. அந்த தொகுப்பினை ஆதாரமாகக் கொண்டதுதான் இந்தநூல்.

இந்நூல் எக்காலத்துக்கும் பொருந்தும் ஸ்ரீகுருஜியின் சிந்தனைகளை புரிந்து கொள்வதற்கும், 'ஸ்ரீகுருஜி சிந்தனைக் களஞ்சியத்தின் 12 தொகுதிகளையும் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் இந்த நூல் தூண்டும் என நம்புகிறோம்.

வெளியிடுவோர்.

# ஸ்ரீ குருஜியும் தேசியமும்

தொகுப்பு: மா.கோ. வைத்ய

ஸ்ரீ குருஜி நூற்றாண்டு விழா குழு
தமிழ்நாடு

**வெளியிடுவோர்:**

ஸ்ரீ குருஜி நூற்றாண்டு விழா குழு, தமிழ்நாடு
1, எம்.வி.நாயுடு தெரு,
சேத்துப்பட்டு, சென்னை - 600 031.

**விலை:**

ரூ. 10.00

**வெளியீடு:**

விய ஆண்டு, கார்த்திகை, 2006

**அச்சிட்டோர்:**

மாதவமுத்ரா
12, எம்.வி. நாயுடு தெரு,
சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
தொலைபேசி : 2836 0874

## அத்தியாயம் - 1

# ராஷ்ட்ரம் எது? ராஜ்யம் எது?

'ராஷ்ட்ரம்', 'ராஷ்ட்ரீய உணர்வு', 'ஹிந்து ராஷ்ட்ரம்' - இவைபற்றி, ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கத்தின் இரண்டாவது சர்சங்கசாலக் (1906-1973) ஸ்ரீ மாதவ சதாசிவ கோல்வல்கர் (ஸ்ரீ குருஜி) அவ்வப்போது தெரிவித்த கருத்துக்கள் அடிப்படைத்தன்மை கொண்டவை. எக்காலத்திற்கும் பொருத்தமானவையும் கூட. 'ராஜ்யம்' என்பதை 'ராஷ்ட்ரம்' என்றே நினைத்து விடுகிறார்கள்; இந்தக் குழப்பம் வெகுவாகப் பரவியுள்ளது.

'நேஷன்-ஸ்டேட் ('Nation-State') என்ற கருத்து உருவானதால் தோன்றிய குழப்பம் இது. இது நீடிக்கிறது. 'ஸ்டேட்' (ராஜ்யம்) - 'நேஷன்' (ராஷ்ட்ரம்) இரண்டிற்கும் ஆழ்ந்த உள்ளார்ந்த பிணைப்பு உண்டு - ஒன்றில்லாமல் மற்றது உயிர்ப்புடன் இருப்பது குறித்து நினைத்துப் பார்ப்பதே இயலாது என்கிற அளவுக்கு இரண்டும் பிணைந்தவை. மீனும் தண்ணீரும் போல. தண்ணீர் இல்லாமல் மீன் இருக்க முடியாது. ஆனாலும் மீன் வேறு. தண்ணீர் வேறு.

அதுபோல 'ராஜ்யம்' வேறு. 'ராஷ்ட்ரம்' வேறு. இந்த வேறுபாட்டை கவனிக்கத் தவறியதால் முதல் உலகப் போருக்குப் பிறகு நாடுகளிடையே சுமுக உறவு நிலவச் செய்வதற்காக நிறுவப்பட்ட அமைப்பிற்கு 'லீக் ஆஃப் நேஷன்ஸ்' என்று பெயரிட்டார்கள். இது மிகவும் பயனுள்ள அமைப்பு என்று தம்பட்டம் அடித்தார்கள். உண்மையில் அது 'லீக் ஆஃப் ஸ்டேட்ஸ்' அல்ல 'லீக் ஆஃப் கவர்ன்மென்ட்ஸ்'தான். அடிப்படையே பிசகாகிப்போனதால் இருபது ஆண்டுகளுக்குள்ளேயே அந்த அமைப்பு இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 'யுனைடட் நேஷனஸ்' (ஐக்கிய நாடுகள்) அமைப்பு ஏற்பட்டது. அதுவும் 'யுனைடட் ஸ்டேட்ஸ்'தான். இந்த ஐ.நா. சபையின் செல்வாக்கு மிக்க உறுப்பு நாடு 'யூனியன் ஆஃப் சோஷலிஸ்ட் சோவியத் ரிபப்ளிக்ஸ்' (யு.எஸ்.எஸ்.ஆர் - சோவியத் ரஷ்யா). அது ஒரு நாடு (ராஷ்ட்ரம்) அல்ல. ஒரு அரசு (ராஜ்யம்) தான்.

ராணுவ பலத்தால் அது ஒன்றாக இருந்தது. அந்த பலம் தேய்ந்தும் சோவியத் உறுப்பு நாடுகள் பிரிந்து போய்விட்டன. யுகோஸ்லோவியாவின் கதியும் இதுதான். அதுவும் ஒரே ராஷ்ட்ரம் அல்ல. அரசுதான். அதாவது ஐ.நா. சபை 'ஐக்கிய அரசுகள் சபை'தான்.

ராஜ்யத்தை நிர்மாணிப்பது தொடர்பாக மகாபாரதத்தின் சாந்தி பர்வத்தில் பொருள் பொதிந்த விவாதம் வருகின்றது. அம்புப் படுக்கையில் படுத்திருக்கும் பீஷ்மரிடம் அரசர் யுதிஷ்டிரர், ''பிதாமகரே! அரசன், ராஜ்யம் எனும் ஏற்பாடுகள் எவ்வாறு உண்டானது?'' என வினவினார். இதற்கு பீஷ்மர் அளித்த பதில் புகழ் பெற்றதாகும். ''அரசு இருக்கவில்லை; அரசன் இல்லை; தண்டிப்பவனும் இல்லை; தண்டிக்கப்பட வேண்டியவனும் இல்லை. மக்கள் தர்மத்தை கடைப்பிடித்து ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக இருந்து வந்தனர்'' என்று பீஷ்மர் பதில் அளித்தார். இதுதான் அந்த மகாபாரத வாக்கியம்,

***''ந வை ராஜ்யம் ந ராஜா ஆஸீத்***

***ந தண்டோ ந சாதண்டிக:***

***தர்மேணைவ ப்ரஜா:***

***ஸர்வா ரக்ஷந்தி ஸ்ம பரஸ்பரம்''***

இதைக்கேட்ட யுதிஷ்டிரருக்கு இயற்கையாகவே மனதில் ''இந்த நிலைமை ஏன் மாறியது?'' என்று மற்றொரு கேள்வி உதித்தது. பீஷ்மரும், ''தர்மம் நலிந்து போனது. வலியோர்கள் எளியோரை துன்புறுத்த ஆரம்பித்தனர்'' என்று விடையளித்தார். மகாபாரதம் இதை, ''மத்ஸ்யந்யாயம்'' என்று கூறுகிறது. (பெரிய மீன் சிறிய மீனை விழுங்குவதுபோல). இவ்வாறு நிலைமை மாறியபோது மக்கள் பிரம்மாவிடம் சென்று, ''எங்களுக்கு அரசனைக் கொடுங்கள்'' என்று யாசித்தனர். 'மனு' முதல் அரசரானார். அரசனுடன் ராஜ்யமும் வந்தது. அதனுடன் ஆட்சிமுறை வந்தது. விதிமுறைகளை மீறுபவர்களை தண்டிக்க நெறிமுறைகள் வந்தன. நெறிமுறைகளின் பின்புலமாக அரசின்பலம் இருந்தது. அதனால், நெறிமுறைகள் நிலைநாட்டப்பெற்றன.

இன்றும் அரசியல் துறையில் இவ்விஷயங்கள் ஏற்கப்படுகின்றன. ராஜ்யம் என்பது சட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டு செயல்படும் ஒரு அரசியல் அமைப்பாகும். சட்டம் சரியானபடி நிலைநாட்டப்படுவதை கவனிக்க அரசின் சக்தி செயல்படுகிறது. ராஜ்யத்தின் அடிப்படையாக விளங்குகின்ற ஒவ்வொரு சட்டத்தின்



பின்னணியிலும் அதை மீறுபவர்களை வழிக்குக் கொண்டுவர ஒரு சக்தி இருக்கும். எர்னஸ்ட் பார்கர் என்னும் அரசியல் நிபுணர், ''ராஜ்யம், சட்டத்திலும், சட்டத்தின் வாயிலாகவும் நிலை பெறுகிறது. ராஜ்யம் என்பது சட்டமே ஆகும் என்றுகூட நம்மால் கூறமுடியும்'' என்கிறார்.

"The state is a legal association: a juridically organised nation or a nation organised for action under legal rules. It exists for law: it exists in and through law: we may even say that it exists as law. If by law we mean, not only a sum of legal rules but also and in addition, an operative system of effective rules which are actually valid and regularly enforced. The essence of ths State is a living body of effective rules: and in that sense the State is law." (Ernest Barker- Principles of Social and Political Theory - Page 89)

அதாவது சட்டத்தின் மேலுள்ள பயம்தான் ராஜ்யத்தின் ஆதாரமாக விளங்குகின்ற சக்தி. ஆனால் ராஷ்ட்ரத்தின் ஆதார சக்தி மக்களின் உணர்வுகள்தான். ராஷ்ட்ரம் மக்களின் மனப்பான்மைக்கேற்றவாறு உண்டாகிறது. ராஷ்ட்ரம் என்றால் மக்கள் என்றுகூட கூறஇயலும். ''People are the nation'' (மக்களே நாடு) ஆங்கிலத்தில் அடிக்கடி நேஷன் (ராஷ்ட்ரம்) பீபிள் (மக்கள்) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

எத்தகைய மக்களால் ராஷ்ட்ரம் உருவாகின்றது? இதற்கு மூன்று முக்கிய காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக மக்களுக்கு தங்கள் வசிக்கும் தேசத்தின் (நிலத்தின்) மீதுள்ள ஈடுபாடு; இரண்டாவதாக வரலாற்று சம்பவங்கள் குறித்து ஒரேமாதிரியான உணர்வு; அது இன்பம் அளிக்கலாம் அல்லது துன்பம் அளிக்கலாம். மகிழ்ச்சி தரலாம் அல்லது வருத்தம் தரக்கூடியதாக இருக்கலாம். மூன்றாவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது; ஒரே பண்பாடு.

ஸ்ரீ குருஜி தமது பல சொற்பொழிவுகளில் இந்த மூனறு கோட்பாடுகளையும் விளக்கி, சந்தேகத்திற்கிடமின்றி இது ஹிந்து ராஷ்ட்ரம்தான் என்பதை நிலைநாட்டியுள்ளார். இந்த பாரதபூமி இந்த ராஷ்ட்ரத்தின் உடல் என்று அவர் கூறுவார். பாரதம் அகண்ட ராஷ்ட்ரம் எனும் விராட்புருஷனுடைய உடல். நாம் அனைவரும் அதன் சிறுசிறு அங்கங்கள். உடலின் அங்கங்கள் போன்று நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி ராஷ்ட்ரம் என்னும் உடலை ஒருங்கிணைந்ததாக வைப்போம்'' என்பது ஸ்ரீ குருஜியின் வாக்கு.

# அத்தியாயம் - 2

# தாய்நாடு

நாம் வாழும் பூமியை நாம் தாய்நாடாகப் போற்றவண்டும். அதன் ஒவ்வொரு அணுவையும் நாம் புனிதமாக கருதவேண்டும். நமது தாய்நாடு வெறும் மண் குவியல் அல்ல. அது உயிரற்ற ஜடப்பொருளல்ல என்ற உணர்வு நம்மில் வேண்டும். இப்படிப்பட்ட உணர்வு படைத்தவர்களால்தான் 'ராஷ்ட்ரம்' (தேசம்) உருவாகிறது. அவர்கள் தான் 'ராஷ்ட்ரீய' (தேசியம்) ஆகிறார்கள். இந்த உண்மையை ஸ்ரீகுருஜி தெள்ளத் தெளிவாக கூறியிருக்கிறார். அவர் தாய் மண்ணின் பெருமையை பலவாறாகத் துதித்துள்ளார். ''நமது புண்ணிய பூமி பாரதம் தேவர்களால் பாடப்பெற்றிருக்கிறது'' என்று கூறுகிறார் ஸ்ரீ குருஜி.

*''காயந்தி தேவா: கில கீதகானி*
*தன்யாஸ்து யே பாரதபூமி பாகே!*
*ஸ்வர்கா பவர்காஸ்பத ஹேதுபூதே*
*பவந்தி பூய: புருஷா: ஸுரத்வாத்!!*

(தேவர்களாகிய நம்மில் யார் ஸ்வர்கம், மோக்ஷத்திற்கு வழிகோலும் பாரத தேசத்தில் பிறந்தவர்களோ அவர்கள்தான் பேறு பெற்றவர்கள்.)

பாரத பூமியை மஹாயோகி அரவிந்தர் உலகத்தின் மங்களமயமான தாயாகபாவித்து, ஜகன் மாதா, ஆதிசக்தி, மஹா மாயா, மகா துர்கா ஆகிய வடிவங்களில் அந்தத் தாயினது தரிசனத்தைப் பெற்றார். அந்த வடிவங்களில் பாரதத்தாயை வழிபட நமக்கும் ஒரு வாய்ப்பினை அளித்தார்.

''நமது தேசியக்கவி ரவீந்திரநாத் தாகூரால் இந்த பூமி ''தேவி புவனமன மோஹினி நீல சிந்து ஜல தௌத சரணதல'' என்று துதிக்கப்பட்டது.

''இந்த பூமியின் சுதந்திர கோஷம் கவி பக்கிம் சந்திரரினால் அவரது ''வந்தே மாதரம்'' என்ற பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஆயிரமாயிரம் இளைஞர்களிடையே துடிதுடிப்பை ஏற்படுத்தி, சுதந்திர வேட்கை காரணமாக மகிழ்ச்சியுடன் தூக்குமேடைக்கு செல்ல தூண்டியது - ''த்வம் ஹி துர்கா தசப்ரஹரணதாரிணீ'' என்ற வந்தேமாதர கீத வரி.

''எந்த பூமி, நமது சாதுக்கள், மகாத்மாக்களினால், தாய்பூமி, தர்ம பூமி, கர்ம பூமி, புண்ய பூமி ஆகிய வடிவங்களில் வழிபடப்பட்டதோ அந்த பூமி உண்மையில் தேவ பூமி, மோட்ச பூமி ஆகும்.

தொன்றுதொட்டு புனித பாரதமாதாவாக இருக்கும் இந்த பூமியின் பெயரை சொல்வதன் மாத்திரத்திலேயே நமது இதயங்கள் தூய்மை, அமைதி, பக்தி ஆகியவைகளின் அலைகளால் நிரம்புகின்றதே, அந்த பூமி நம் அனைவருக்கும் அன்னை. இதுதான் ஒளிமயமான நமது தாய்நாடு.''

(''ஞானகங்கை'யிலிருந்து)

19-ம் நூற்றாண்டில் பக்கிம் சந்திரர், 20-ம் நூற்றாண்டில் ரவீந்த்ரநாத் தாகூர், அரவிந்தர் வாழ்ந்த காலகட்டத்தில்தான் நமக்கு இத்தகைய உணர்வு ஏற்பட்டது என்பது இதன் பொருளல்ல. இது தொன்றுதொட்டு நிலவுகிறது. ''தாய் என்பது பூமி, நான் அந்த தாயின் புதல்வன்'' என்று அதர்வ வேதத்தில் கூறப்பட்டுள்ளது. வேதத்தில் மற்றொரு இடத்தில் ''ப்ருதிவ்வை சமுத்ரபர்யந்தாயா ஏகராட்'' என்று குறிப்பிடும் நமது முன்னோர்கள் வெகுகாலத்திற்கு முன்பே

*''உத்தரம் யத் ஸமுத்ரஸ்ய ஹிமாத்ரேஸ்சைவ தக்ஷிணம்*

*வர்ஷம் தத் பாரதம் நாம பாரதீ யத்ர ஸந்ததி:''*

என்று கூறியுள்ளனர்.

மகாகவி காளிதாசரும்

*''அஸ்த்யுத்ரஸ்யாம் திசி தேவதாத்மா*
*ஹிமாலயோ நாம நகாதிராஜ:*
*பூர்வாபரௌ தோயநிதீ வாகாஹ்ய*
*ஸ்தித: ப்ருதிவ்யா இவ மானதண்ட:*

என்று பாடியுள்ளார்.

''ஹிமவத்ஸமுத்ராந்தரம் உதீசீனம் யோஜன ஸஹஸ்ர பரிமாணம்''

(இந்து மகா கடலின் வடக்கிலிருந்து இமயமலை வரைக்கும் பரவியுள்ள இத்தேசத்தின் அளவு 1000 யோஜனைகள் ஆகும்) என்பது சாணக்கிய வசனம்.

('ஞானகங்கை'யிலிருந்து)

குமரியும் இமயமலையும் நமது தாய்நாட்டின் எல்லையைக் குறிக்கும் இருபுள்ளிகள் என்ற கருத்து மக்களின் மனதில் மிக ஆழமாக பதிந்துள்ளது. இது குறித்து ஸ்ரீ குருஜி கூறுகிறார், "நமது சமுதாயத்தில் ராமபிரான் நம்முடைய வரலாற்றிலும், பண்பாட்டிலும் தன்னுடைய அழிக்கமுடியாத முத்திரை பதித்து சென்றிருக்கிறார். அவரது குணங்களாகிய தெளிவு, பரந்த மன்ப்பான்மை, ஞானம், கடலினை ஒப்ப ஆழமான கம்பீரமான அவரது பொறுமை, அளவிட இயலாத சக்தி, திடஉறுதி ஆகிய குணங்கள் உயர்ந்த வெல்லமுடியாத இமாலயத்திற்கும் ஒப்பிடப் பட்டிருக்கிறது.

*ஸமுத்ர இவ காம்பீர்யே தைர்யே ச ஹிமவானிவ*

**என்பது அக்கருத்தின் வெளிப்பாடாகும்.**

(ஞானகங்கை)

சிலர் வாதிடும்பொழுது, இந்த தேசம் அசைவற்ற, உயிரற்ற பரந்த நிலப்பரப்பு மட்டுமே என்று கூறுகின்றனர். அவர்களுக்கு பதிலளிக்கையில் ஸ்ரீகுருஜி, "வாதிடுவதற்கும் ஒரு எல்லை உண்டு. மனிதனுடைய உடல் ஐம்பூதங்களாலானது. அவனது தாயின் சரீரம் எவ்வாறு ஐம்பூதங்களால் ஆனதோ, அதுபோன்றே, மற்ற பெண்களின் சரீரமும். அவ்வாறிருக்க மற்ற பெண்களை தாயினிடமிருந்து ஏன் வேறுபடுத்திக் காண்கிறோம்? தாயினிடம் மட்டும் ஏன் பக்தி வருகிறது?" என்று கேட்கிறார்.

('ஞானகங்கை'யிலிருந்து)

இந்த பூமியை நாம் தாயின் வடிவில் காண்கிறோம். எனவேதான் "வந்தே மாதரம்" என்று கூறும்பொழுது பெருமிதத்துடன் பூரிக்கிறோம். "வந்தே மாதரம்" பாடுவதை எதிர்ப்பவர்கள் எப்படி தேசியவாதிகளாக முடியும்? ஸ்ரீ குருஜி கூறுகிறார் "நாம் இந்த பூமியின் மைந்தர்கள் என்று கூறும்போது நமக்கு இந்த பூமியைக் குறித்து உயர்ந்த எண்ணம் இருத்தல் அவசியமாகும். ஏதேனும் ஒரு காரணத்திற்காக மட்டுமே இங்கு வசிப்பவர்கள் இந்த பூமியின் மைந்தர்களாக இயலாது. இதற்கு தகுந்த ஒரு எடுத்துக்காட்டு இப்போது நம்மிடையே உள்ளது. இது ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலை.



"வந்தே மாதரம்" என்னும் பாடலை நாம் சிரத்தையுடன் ஜபிக்கிறோம். இந்த பெருமை வாய்ந்த பாடலின் பொருட்டு நமது உள்ளத்தில் மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. நம் தலைவர்கள் அனைவரையும் தாய்மண்ணிற்கு சேவை செய்வதற்கும், சுதந்திரத்திற்காக பாடுபடுவதற்கும் அனைத்தையும் தியாகம் செய்யத் தூண்டியது இப்பாடல்தான். இந்த மந்திரத்தை கோஷமிட்டபடி எத்தனையோ மாவீரர்கள் தூக்குமேடைக்கு ஏறியிருக்கிறார்கள். கையில் கீதையை ஏந்திக்கொண்டு, இப்பாடலை பாடியபடி பலர் இன்னுயிரை அர்ப்பணம் செய்துள்ளார்கள். அத்தகைய அர்ப்பணத்தின் பலனாக ஆங்கிலேயர்கள் வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் நமக்கு விடுதலை கிடைத்தது. இன்று நாம் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆயினும், சிலர் "வந்தே மாதரத்திற்கு" ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். இந்த ஆட்சேபணையானது, ஹிந்துக்கள் மட்டுமே இந்த பூமியின் சந்ததியினர் என்ற உண்மையை கோடிட்டுக்காட்டுகிறது. முஸ்லிம்களும் இந்த பூமியின் சந்ததியினர் என்று தங்களை கூறிக்கொள்வார்களேயானால், அவர்களும் முழுமையான சிரத்தையுடன் "வந்தே மாதரம்" என்று உச்சரிக்க வேண்டும் (ஸ்ரீகுருஜி சமக்ர தர்ஷன்).

சுருக்கமாக கூறினால், மக்கள் தங்களது தேசத்தை தாயாகக் கருதி, அதனுடைய பெருமையை மதிப்புடனும், சிரத்தையுடனும் போற்ற வேண்டும் என்பதுதான் 'ராஷ்ட்ரம்' என்பதன் முதல் தேவை.

## அத்தியாயம் - 3

# ராஷ்ட்ரம் என்னும் சமுதாயம்

இந்த பூமி மனிதனின் உழைப்பிற்கும், வலிமைக்கும் ஆதாரம். மனிதன் ஆத்மாபோல. 'மக்கள்' என்று அழைக்கிறோம், அந்தப் புனிதப் பொருள் முற்றிலும் மனிதனால் அமைவதுதான். உலகாயதமான பொருள் மட்டுமோ அல்லது சூழ்நிலையோ ஒரு 'ராஷ்ட்ரம்' உருவாவதற்கு போதுமானதல்ல. ஏனெனில் ராஷ்ட்ரம் என்பது ஆன்மிகக் கோட்பாடு. குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்கள் கூட்டம் மட்டுமே 'ராஷ்ட்ரம்' ஆகிவிடாது.

“ The soil provides the substatum the field for struggle and labour: man provides the soul. Man is everything in the formation of this sacred thing that we call a people. Nothing that is material suffices here. A nation is a spiritual principle; the result of the intricate workings of history: a spiritual family not a group determined by the configuration of the earth.” (Ernest Renan : What is a Nation :- Quoted in Modern Political Thought by William Ebenstein, page-764)

இது புகழ்பெற்ற பிரெஞ்சு சிந்தனையாளர் எர்னெஸ்ட் ரேனாவின் கருத்தாகும். ‘‘தேசம் என்பது என்ன?’’ என்னும் தலைப்பில், தனது நூலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த ஆன்மீகக் கோட்பாட்டை தோற்றுவிக்கும் மேலும் இருவிஷயங்களையும் குறிப்பிடுகிறார். ‘‘இரு விஷயங்களும் ஒன்றையே குறிக்கின்றன. ஒன்று நிகழ்காலத்திற்கு உகந்தது. மற்றொன்று நடந்து முடிந்தது. ஒன்று கடந்தகால அனுபவங்களும், நினைவுகளும் ஆகும். மற்றொன்று நிகழ்காலத்தில் ஒற்றுமையுடன் வாழ்வதற்கான ஆர்வம். கடந்த காலத்தில் நாம் இதை செய்தோம், வருங்காலத்தில் இதைச் செய்வோம் என்ற எண்ணமிடுபவர்களுடையதுதான் தேசம். மனிதனை செயற்கையாக உருவாக்க இயலாது. அதுபோலவே தேசமும் செயற்கையாக உருவாக இயலாது. உழைப்பு, தியாகம், பலிதானம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் தேசம் உருவாகும்.’’

“ A nation is a soul, a spiritual principle. Two things which are really only one go to make up this soul or spiritual principle. One of these things lies in past, the other is in present. The one is the possession in common of a rich heritage of memories; and the other is actual agreement: the desire to live together and the will to continue to make the most of the joint inheritance. Man cannot be improvised. The nation, like the individual is the fruit of a long past spent in toil, sacrifice and devotion.” ( ibid - page 765 )

ஒன்றே கால் நூற்றாண்டுக்கு முன்பு ரேனா கூறியதும், தற்காலத்தில் ஸ்ரீகுருஜி கூறியதும், வெவ்வேறு விதமாக கூறப்பட்டாலும், கருத்து ஒன்றே.

ஸ்ரீ குருஜி கூறுகிறார்:‘‘எந்த ஒரு தேசத்திற்கும் முக்கியமாக, இயல்பான எல்லைக்கு உட்பட்ட நிலப்பரப்பு இருத்தல் முதல் தேவை. அதன் வளர்ச்சிக்கும், செழுமைக்கும் வகை செய்யும் பூமி அது.



இரண்டாவதாக அந்த குறிப்பிட்ட நிலப்பரப்பில் வசிக்கும் மக்கள் சமுதாயம் அதை தாய்மண்ணாக கருதி, அதன்மீது அன்பு செலுத்தி வணங்கி, அதை தங்களது வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும், செழுமைக்கும் ஆதாரமாக உணர்தல் வேண்டும். சுருங்க கூறினால், சமுதாயம் தன்னை அந்த நிலத்தின் புதல்வனாக உணர வேண்டும்.’’

‘‘இந்த சமுதாயம் மனிதர்களின் கூட்டமாக மட்டுமே இருத்தல் கூடாது. வேறு இனத்தை சேர்ந்த தனிமனிதர்களை எவ்வாறாயினும் ஒருங்கிணைப்பதுமல்ல. இந்த சமுதாய வாழ்க்கையின் பொருட்டு குறிப்பிட்ட வழிமுறை உருவாகியிருத்தல் வேண்டும். இந்த சமுதாயத்திற்கு வாழ்க்கை லட்சியம், பண்பாடு, அனுபவங்கள், உணர்வுகள், நம்பிக்கைகள், பாரம்பரியம் எல்லாமாக சேர்ந்து ஒரு வடிவம் தந்திருக்க வேண்டும். இவ்வாறு, பொதுவான பாரம்பரிய, நாட்டம் பொருந்தியதாக கடந்தகால இன்ப துன்பங்கள் குறித்து நினைவுகள் கொண்டதாக, நண்பன் யார், எதிரி யார் என்பது ஒரே கருத்துள்ளவர்கள் நிறைந்ததாக, அனைவர் நலனும் பொதுவாக அமைந்ததாக - மக்கள் கூட்டம் ஒன்று அந்த குறிப்பிட்ட நிலப்பரப்பின் புதல்வர்களாக வசிப்பதுதான் ராஷ்ட்ரம். ‘நம் அனைவரின் நலனும் ஒன்றேதான்; பிரிக்கப் படமுடியாதது அது; நண்பர்களும் எதிரிகளும் நம் அனைவருக்கும் பொது’ - என்று இவ்வாறு நாம் உணர்ந்த போதெல்லாம் தேசிய வாழ்வில் பிரம்மாண்டமான சக்தி உதித்தது; அதன் விளைவாக அன்னிய சக்திகள் தூள்தூளாக நாம் காலடியில் விழுந்தன. ‘ராஷ்ட்ரம்’ என்பது முழுமையாக அமைவதற்கான எல்லா அம்சங்களும் ஹிந்துக்களின் வாழ்க்கையில் உண்டு. எனவேதான் ஹிந்து வாழ்க்கையே தேசிய வாழ்க்கை என்கிறோம். சுருக்கமாக இது ஹிந்து ராஷ்ட்ரம்’’.

ரஷ்யாவின் சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலின் அவர்கள் கூறியதை ஸ்ரீகுருஜி இங்கு குறிப்பிடுகிறார். ‘‘ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் பொருளாதர, அரசியல் நலன் மீது மட்டுமே ராஷ்ட்ரம் உருவாவதில்லை. ராஷ்ட்ரம் என்பது உலகாயதம் கடந்த உணர்வுகளின் ஒருங்கிணைப்பாகும்.’’

ஸ்டாலின் ‘‘உலகாயதம் கடந்த உணர்வுகளின் ஒருங்கிணைப்பு’’ என்று கூறுகையில், ரேனா ‘‘ஆன்மீக உணர்வுகள்’’ என்று கூறுகிறார். ஸ்ரீகுருஜி ‘‘தேசியத்தின் பொருட்டு, முழு உலகமும் ஏற்கும் மானசீக ஈடுபாடு’’ என்று கூறுகிறார். மேலும், தேசிய வாழ்க்கைக்கு ஒற்றுமை,

மேம்பாடு, கௌரவம் அமைவதற்கு எக்காலத்திலும் பொருத்தமான ஆதாரங்களை ஸ்ரீ குருஜி பட்டியலிடுகிறார்.

(1) ''முதலாவதாக, தொன்றுதொட்டு நாம் புனிதபூமியாக எண்ணுகிற தேசத்திடம் கொழுந்து விட்டெரியும் பக்தி வேண்டும்.

(2) 'நாம் அனைவரும் மகத்தான தாயின் புதல்வர்கள் என்ற உணர்வால் தோன்றும் தோழமை, சகோதரத்துவம் ஆகிய உணர்வுகள் வேண்டும்.

(3) தேசிய வாழ்வு எனும் பொது பிரவாகம் குறித்து திட்டவட்ட விழிப்புணர்வு தேவை. பொதுவான வரலாறு, பாரம்பரியம், கொள்கைகள், கலாச்சாரம், பொது லட்சியம், பொது நாட்டம் இவற்றால் தோன்றுவது அந்த விழிப்புணர்வு.

வாழ்க்கைக்கு அடிப்படையான இந்த மூன்று குணங்களும் சேர்ந்த வடிவம் ஹிந்து தேசியம். தேசம் என்னும் கோவில் உருவாவதற்கு அஸ்திவாரம் இது.

('ஞான கங்கை'யிலிருந்து)

## அத்தியாயம் - 4

## பண்பாடு: தேசியத்தின் இதயம்

தேசம் என்றால் மக்கள் அல்லது சமுதாயம். அதன் சிறப்பு சமுதாயத்தின் பணபாடு. பண்பாடு அல்லது கலாசாரம் என்பது சமுதாயத்தின் வாழ்வியல் விழுமியங்கள்; கலாசாரம் என்பது அந்த சமுதாயத்தின் நல்லனவற்றையும், தீயனவற்றையும் அளக்கும் அளவு கோல். சுருங்கக் கூறின் கலாசாரம் என்பது தேசத்தின், தேசியத்தின் உயிராகும். ஸ்ரீ குருஜி கூறுகிறார்:

''ஹிந்து ராஷ்ட்ரம் என்பது நம்மைப் பொறுத்தவரை, பொருளாதார உரிமைகள் கொட்டிவைத்த கூடை அல்ல. உண்மையில் அது கலாசாரத்தன்மை கொண்டது. நமது தொன்மையான, உயர்ந்த கலாச்சார வாழ்வியல் விழுமியங்களின் அடிப்படையில்தான், ராஷ்ட்ரம் உயிர்



வகுக்கப்பட்டுள்ளது. நமது கலாசார உணர்வு புத்திளமை பெற்றால்தான் நமது தேசிய வாழ்க்கையை நாம் நன்கு உணர முடியும்; நம்முன் உள்ள எண்ணிலடங்காத பிரச்சினைகளுக்கு தீர்வு காண, நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு சரியான வழிகாட்டுதல் கிடைப்பதும் சாத்தியம்.

ஆனால், 'கலாசார புத்திளமை' என்பதை 'பத்தாம்பசலித்தனத்துக்குப் புத்துயிர்' அல்லது 'பிற்போக்குத்தனம்' என்று பட்டம் சூட்டி விடுகிறார்கள். தொன்மையான முன்முடிவுகள், மூடநம்பிக்கைகள், ஊருக்குத் தீங்கான கருத்துக்கள் ஆகியவற்றுக்கு புத்துயிரூட்டுவதை பிற்போக்குத்தனம் என்று கூறலாம். ஏனெனில், இவற்றின் விளைவுகள் சமுதாயத்தை மண்மூடிப்போகச் செய்யும். ஆனால், நிலையான சந்தோஷமான வாழ்வின் ஆதாரங்களின் மறுமலர்ச்சி பிற்போக்குத்தனமாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. நமது கலாசாரம் பழமையானதாக இருப்பதினால் மட்டுமே, அதை பிற்போக்குத்தனமானது என்று கூறுவது, ஞானசூனியத் தன்மையை வெளிச்சம்போடும் வேலை அன்றி வேறில்லை. எந்த கலாசாரத்தினால், நமது தேசிய வாழ்வு ஆயிரமாண்டுகளாக நலமானதாகவும், நிலையானதாகவும் திகழ்ந்ததோ அந்த கலாசாரத்திற்கு மறுவாழ்வு அளிப்பதுதான் கலாச்சார மறுமலர்ச்சி என்று நாம் கூறுவதன் பொருள்.

நமது கலாசாரத்தின் சிறப்புகளை பற்றி விளக்குகையில் ஸ்ரீகுருஜி இவ்வாறு கூறுகிறார்: ''உலகம் முழுவதும் பரவியிருக்கின்ற பேருண்மையை, (அது எந்த பெயரால் அழைக்கப்பட்டாலும் சரி) அறிவதற்கான ஆர்வமே முதல் அம்சம். இதை எளிய முறையில் கூறினால், ''கடவுளை தரிசிப்பது'' ஆனால், கடவுள் இருப்பது எங்கே? நாம் கடவுளை அறிவது எப்படி? கடவுளுக்கு என்ன வடிவம்? தியானம் செய்து கடவுளை அடைய, கடவுளின் தோற்றம் தன்மை என்னென்ன? கடவுள் குணமற்றவனாகவும், உருவமற்றவனாகவும் வர்ணிக்கப்படுவதால் நமது பிரச்சினைகளுக்கு தீர்வில்லை. வழிபடு முறைகளும் விதவிதமாக பெருகி உள்ளன. மக்கள் கோயிலுக்கு சென்று, அங்குள்ள சிலையை சர்வ சக்திவாய்ந்த கடவுளின் அடையாளமாக எண்ணி தியானம் செய்ய முயற்சிக்கிறார்கள். இவை எல்லாம் மக்களின் செயல்துடிப்பே தவிர மக்களுக்கு திருப்தி அளிப்பதில்லை.

''எனவேதான், நமது முன்னோர்கள் 'நமது சமுதாயமே நமது கடவுள்' என்றனர். 'மக்களே மகேசன்'. பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர் 'மக்களுக்கு தொண்டு புரியங்கள்' என்று கூறினார். மக்களிடம்

இறைவனை காணும் மிகச்சிறந்த மனப்பாங்கே நமது ராஷ்ட்ர கோட்பாட்டின் இதயம். இந்தக் கடவுள் நம் சிந்தனையை ஆட்கொண்டவர். நம் கலாச்சார மரபில் விதவித கோட்பாடுகள் தோன்றச் செய்தவர்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. மக்களுக்கு சேவை புரிவதே மகேசனுக்கு செய்யும் பூஜை. இந்த கருத்தை மனிதன் மனதில் பதித்துக் கொண்டால், உரிமை குறித்து பேச மாட்டான். தன் கடமையை நினைவில் கொள்வான். ''இன்று உரிமைகள் வேண்டி எங்கு பார்த்தாலும் முழக்கம் அதிர்வதைக் கேட்கிறோம். அனைத்து அரசியல் கட்சிகளும் உரிமைகள் பற்றி பேசி மக்கள் மனதில் அகம்பாவத்தை தூண்டிவிடுகிறார்கள். கடமை, தன்னலமற்ற சேவை இவற்றுக்கு எங்குமே முக்கியத்துவம் அளிப்பதில்லை. தான், தன் உரிமைகள் என்ற இந்த சூழ்நிலையில் சமுதாயத்தின் ஆன்மாவான ஒத்துழைப்பு உணர்வு நிலைக்க முடியாது. இதனால், தேசிய வாழ்வின் பல்வேறு அங்கங்களிடையே மோதல் நடப்பதைப் பார்க்கிறோம். நமது கலாச்சாரக் கண்ணோட்டத்தை உள்வாங்கி கொள்வதன் மூலமே தேசிய வாழ்வில் உண்மையான ஒத்துழைப்பு உணர்வு, கடமை உணர்வு ஆகியவை மறுபடியும் நிலை கொள்ளும்'' என்று ஸ்ரீ குருஜி கூறுகிறார்.

நமது கலாசாரம் குறித்து மற்றொரு சிறப்பையும் ஸ்ரீகுருஜி கூறுகிறார். ''இமயம் போன்று உயர்ந்த நமது கலாசாரத்தில் மற்றுமொரு சிகரம் உள்ளது. அதை அடைவதற்கான ஆர்வத்தை இன்றுவரை உலகில் வேறு எங்கும் காட்டியதில்லை. ''ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி'' (உண்மை ஒன்றுதான். அறிஞர்கள் அதை வெவ்வேறு விதமாக கூறுகின்றனர்) என்ற சொற்றொடர் மூலம் இந்த எண்ணம் வெளிப்படுகிறது. இத்தகைய எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு இணையான சொற்றொடர் ஆங்கிலத்தில் எதுவும் இல்லை. ''சகிப்புத்தன்மை'' என்னும் சொல்லை, இந்த உணர்வை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்துகிறார்கள்; அது வெகு அற்பமானது. அந்த சொல் பொறுத்துக் கொள்வதை மட்டுமே வெளிப்படுத்துவதற்கான வேறொரு சொல்லாகும். இதில் ''நான்'' என்ற உணர்வு இருக்கிறது. இது பிறர் கண்ணோட்டத்தை பொறுத்துக் கொள்வதாக கூறும் உணர்வு. அதில் அன்பிற்கோ, மரியாதைக்கோ இடமில்லை. ஆனால், மற்றவர்களின் மத நம்பிக்கைகளையும், எண்ணங்களையும் மதிப்பதுடன் அவற்றை ஏற்கும் வகையிலும்அமைகிறது நமது பயிற்சி. அதாவது, ஒரே சத்தியத்தை



அடைய பலவழிகள் உள்ளன என எண்ணுகிறோம்.''

ஸ்ரீ குருஜி மேலும் கூறுகிறார், ''எப்பொழுது நாம் நமது உயர்ந்த கலாசார விழுமியங்கள் பற்றிய பேச்செடுத்தாலே மேற்கத்திய வாழ்க்கை முறையில் ஊறியவர்கள், இது ஏதோ மூடுமந்திரம், பரலோகம் தொடர்பான விஷயம் என்று நினைத்துவிடுகிறார்கள். ஆனால் இது நமது மானசீக அடிமைத்தனம் இன்று எந்த அளவு வேரோடியிருக்கிறது என்பதையே காட்டுகிறது. நமது தேசிய வாழ்விற்கு கௌரவம் சேர்த்த தத்துவங்களைப் புரிந்து கொள்ளும் சக்தியற்றவர்களாக நம்மை ஆக்கி வைக்கும் அடிமைத்தனம் அது.''

நடனம், சங்கீதம், திரைப்படம் நாடகம் இவை 'கலாசாரப் பணி' என எண்ணுவதற்கு ஸ்ரீ குருஜி எப்படி உடன்படுவார்? ஸ்ரீ குருஜி, ''இன்று நாம் இன்னொரு வரம்புமீறலைப் பார்க்கிறோம். நடனம், சங்கீதம், திரைப்படம், நாடகம் ஆகியவைகளே நமது கலாசாரம் என்று கருதிவிடுகிறோம். இந்த வகையான 'கலாசார நிகழ்ச்சிகள்' நாட்டில் அனைத்து இடங்களிலும் நடப்பதைக் காண்கிறோம். சந்தேகத்திற்கிடமின்றி, மலிவான மனமகிழ்ச்சிக்கு மற்றொரு பெயர் 'கலாச்சாரம்' என்று ஆகிவிட்டது. அருவறுக்கத்தக்க ஒழுக்கக்கேட்டுச் சேற்றில் சிக்கிய பேர்போன சினமா நடிக நடிகைகள் 'கலாச்சார தூதுகுழு' உறுப்பினர்களாக்கப்படும் அளவுக்கு விஷயம் அவமானகரமான கேலிக் கூத்தாகிவிட்டது.

ராமனும் சீதையும் அவதரித்து லட்சிய ஒழுக்கத்தை வாழ்ந்துகாட்டிய பூமி இது. அந்நாளில் உன்னத தத்துவ ஞானிகளையும் ரிஷிகளையும் உலகுக்கு அளித்த நாடு இது. நேற்று மனப்பூர்வமான மரியாதையையும் அன்பின் பணிவையும் உலகுக்கு அருளிய ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் போன்றோரை தனது கலாச்சார தூத்துவர்களாக தந்த நாடு இது. இன்று இப்படிப்பட்ட நபர்கள் 'கலாச்சார பிரதிநிதிகளாக போவது நமது வீழ்ச்சி எவ்வளவு பயங்கரமானது என்பதைக் காட்டுகிறது''

இந்த உன்னத கலாச்சாரத்தின் தேவை நம் தேசத்துக்கு மட்டுமல்ல சர்வதேச அரங்கிலும் அது பயன்படுகிறது. இந்த விஷயத்தை விளக்குகையில் ஸ்ரீ குருஜி கூறுகிறார் 'நமது கலாச்சார கண்ணோட்டம்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் இடையே உண்மையான அன்பு, புரிந்துணர்வு இவற்றுக்கான அடித்தளம் அமைக்கிறது.

வாழ்வில் முழுமையான பார்வை தருகிறது. இன்று போரால் சீரழிந்த உலகின் முன், நமது இந்த கலாச்சாரக் கண்ணோட்டத்தைத்தான் ஆணித்தரமாக எடுத்துக்கூற வேண்டும். இத்தகைய உயர்ந்த லட்சியத்தில் வெற்றிபெற நாம் விரும்பினால், அதற்கு முதலில் எடுத்துக்காட்டாக நாம் திகழ்தல் வேண்டும். அன்னிய'இஸம்'களின் மனத்தளைகளையும் நவீன வாழ்வின் விதேச நடையுடைய பாவனைகளையும் நிலையில்லாத 'பாஷன்'களையும் நாம் உதறி விடுபட வேண்டும். பிறரை பின்பற்றுவதை விட ஒரு நாட்டிற்கு அவமானம் தரக்கூடியது வேறொன்றுமில்லை. நாம் கண்மூடித்தனமாக பிறரை பின்பற்றுவதால், முன்னேற இயலாது என்பதை நினைவில் கொள்வோம்.''

('ஞான கங்கை'யிலிருந்து)

## அத்தியாயம் - 5

# ஹிந்து ஏன்?

எந்த தேசத்தை சேர்ந்த மக்கள் அல்லது சமுதாயம் தனது தேசத்தை தாய்நாடாக போற்றுகிறார்களோ, எந்த சமுதாயத்திற்கு வரலாற்று அனுபவங்கள் பொதுவாக இருக்கின்றதோ, எந்த சமுதாயத்தின் கலாசார வாழ்வியல் விழுமியங்கள் ஒன்றாக இருக்கின்றதோ அந்த சமுதாயம் தான் ராஷ்ட்ரம் (தேசம்) என்பது மேற்கூறிய விளக்கத்திலிருந்து தெளிவாகிறது. நமது தேசத்தைப் பொருத்தமாட்டில் அத்தகைய சமுதாயம் ''ஹிந்து'' சமுதாயம். எனவே இது ஹிந்து ராஷ்ட்ரம். ஒரு ராஷ்ட்ரம் உருவாவதற்கு ஒரே மொழி அவசியம் இல்லை. அமெரிக்கா, கனடா இருதேசங்களிலும் மொழி ஒன்றுதான். ஆயினும் அவை வெவ்வேறு தேசங்கள். ஏனென்றால், அவற்றின் வரலாறுகள் வேறு வேறாகும். சுவிட்சர்லாந்தில் மூன்று மொழிகள் வழக்கத்தில் உள்ளன. ஆயினும் அது ஒரே தேசம்தான். மொழிகள் வெவ்வேறாக இருந்த போதிலும், அபிப்ராயம் ஒன்றாக இருத்தல் வேண்டும். சமயம் அல்லது வழிபாட்டு முறை ஒன்றாக இருத்தல் வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஹிந்துக்களின் மனமும், ஹிந்து கலாசாரமும் பன்முகத்தன்மைக்கு



என்றும் அத்தாட்சி. பொதுவான பொருளாதார நலன்களால் பொருளாதாரக் கூட்டு ஏற்படலாம். ராஷ்ட்ரம் ஏற்படாது. எர்னஸ்ட் ரேனாவும் இந்தக் கருத்தையே கூறுகிறார்:

"Community of interests brings about commercial treaties. Nationality which is body and soul both together, has its sentimental side: and a Customs Union is not a country." ( ibid - page 764 )

இன்று ஐரோப்பா இதே கருத்துக்கு எடுத்துக்காட்டு. இங்கிலாந்து தவிர, மற்ற அனைத்து ஐரோப்பிய நாடுகளும் ஒரே நாணயத்தை (கரன்ஸியை) ஒப்புக் கொண்டுவிட்டன. ஆயினும், ஐரோப்பிய யூனியனில் அடங்கிய தேசங்கள் தங்களது சுதந்திரத்தையும், தங்களுடைய அடையாளங்களையும் அழித்துவிடவில்லை. தனது தனித்தன்மையுள்ள கலாசாரத்திற்கு ஆபத்து வரும் என்று உணர்ந்து, பிரான்சு விழித்துக் கொண்டு, ஐரோப்பிய யூனியனுக்கு மேலும் நெருக்கமாவதை எதிர்த்து வருகிறது.

ஹிந்து சமுதாயத்தில் பலவித பன்முகத்தன்மை உண்டு. மொழிகள் பல. பல சாதிகள் உள்ளன. மாநில வேறுபாடும் உள்ளது எனினும், அனைவரின் உள்ளத்திலும் கலாசார ஒருமைப்பாட்டுணர்வு உள்ளது. வெவ்வேறு மொழிகளும் அதே கலாசார ஒருமைப்பாட்டினை கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த ஒருமைப்பாட்டின் மறுபெயர்தான் ''ஹிந்து''. தேசத்தின் பெயரும் ஹிந்துஸ்தான். பல நூற்றாண்டுகளாக உள்ள ஹிந்து என்ற பெயரை நாம் விட்டுவிடுதல் கூடாது என்று ஸ்ரீகுருஜி வற்புறுத்தினார். ''ஹிந்து'' என்ற பெயரில் தவறு ஏதுமில்லை. என்பது ஸ்ரீகுருஜியின் கூற்று.

''தொன்றுதொட்டு மிக உயர்ந்த, நன்கு பண்பட்ட சமுதாயம், ''ஹிந்து'' என்று அழைக்கப்படுகின்ற சமுதாயம், தாய் மண்ணின் புதல்வனாக வாழ்ந்து வருகின்றது. ஆயினும், சிலர் ''ஹிந்து'' என்ற சொல்லுக்கு ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். சிலர், வழிவழியாக வந்த இந்த சொல்லை ஆராய்ந்து, அன்னிய நாட்டினரால் இந்த பெயர் வந்தது என்று கூறுகிறார்கள். ஹிந்து என்ற பெயருக்கு பதிலாக ''ஆர்ய'' அல்லது ''பாரதீய'' என்னும் சொல்லை பயன்படுத்தலாம் என்று யோசனை சொல்கிறார்கள்.''

இது தொடர்பாக ஸ்ரீகுருஜி குறிப்பிடுகிறார்: ''சந்தேகத்திற்கு இடமில்லாமல் 'ஆர்ய' (மேலோர்) என்பது சுயமரியாதை நிறைந்த தொன்மையான சொல். ஆயினும் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக இந்த

சொல் பழக்கத்தில் இல்லாமல் போய்விட்டது. கடந்த நூற்றாண்டில் வரலாற்று ஆராய்ச்சி என்ற பெயரில், ஆங்கிலேயர்கள் ஆர்ய-திராவிட இனவாதம் என்னும் விஷவித்தை மக்களின் மூளையில் ஆழமாக ஊன்றிவிட்டனர். அதனால், ''ஆர்ய'' என்னும் சொல்லைப் பயன்படுத்துவது நமது நோக்கம் நிறைவேற தடங்கலாகி விடும்''

'பாரதீய' என்னும் சொல் பற்றி ஸ்ரீ குருஜி:

''பாரதீய என்னும் சொல் தொன்மையானது. அது தொன்றுதொட்டு நம்முடன் தொடர்புள்ளது. பாரதம் என்னும் சொல் வேதத்திலேகூட காணப்படுகிறது. நமது புராணங்களிலும் நமது தாய்நாடு 'பாரதம்' என்றும், அங்கு வசிப்பவர்கள் 'பாரதீ' என்றும் குறிப்பு உள்ளது. உண்மையில் ''பாரதீ'' என்பது ''ஹிந்து'' என்பதன் மறுபெயர்தான். ஆனால், இன்று பாரதீய என்னும் சொல் குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. ''இந்தியன்'' என்னும் சொல்லின் மொழிபெயர்ப்பாக 'பாரதீய' பயன்படுத்தப்படுகிறது. பாரதம் என்பதற்கு ஹிந்து என்றே பொருள். ''பாரதம்'' என்னும் சொல்லை எவ்வாறு உருக்குலைத்தாலும் வேறொரு பொருளை பெற முடியாது. இந்து என்னும் ஒரு பொருளையே பெற முடியும். பின்பு, ஹிந்து என்ற சொல்லை ஏன் அறுதியிட்டு பயன்படுத்துவதில்லை? நமது தேசத்தை அடையாளம் காட்டும் எளிய சொல் ''ஹிந்து''. நாம் வெளிப்படுத்த எண்ணுவதை, ஹிந்து என்ற சொல்லால் தான் வெளிப்படுத்த முடியும்.

'ஹிந்து' என்னும் சொல் புதியது என்பதோ, அன்னியர்களால் நமக்கு தரப்பட்டது என்பதோ வரலாற்று அடிப்படையிலும் கூட சரியல்ல. உலகிலேயே தொன்மையான நூலாகிய ரிக் வேதத்தில் 'சப்த சிந்து' என்னும் பெயர் கிடைக்கப்பெறுகிறது. அந்த சொல் நமது தேசத்தையும் நமது மக்களையும் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ம்ஸ்க்ருதத்தின் 'ஸ' என்ற எழுத்து, சில பண்படாத மொழிகளிலும், ஐரோப்பிய மொழிகளிலும் 'ஹ' என்று மருவி வரும். இவ்விதம், முதலில் 'ஹப்த ஹிந்து' ஆனது. அதன் பின்பு 'ஹிந்த' ஆனது. எனவே, 'ஹிந்து' என்பது நமது சொல்; அது பெருமிதம் தரும் பெயர். வெளிநாட்டவர் நம்மை அவ்வாறுதான் அழைத்தனர்.

மேற்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் 'ஸ' என்பது 'ஹ' என்று உச்சரிக்கப்படுகிறது என்பதை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். 'ஸப்தாஹ' (வாரம்) என்பது 'ஹப்தா' என்று ஆகிறது. 'ஸம' என்பது 'ஹம' ஆகிறது. 'ஸமத்துவம்' என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டே 'ஹமதர்த்' 'ஹம்ஸபஃர்' போன்ற சொற்களும் வந்தன



பார்ஸிகளின் சமயநூலில் 'ஸுர' என்பது 'ஹுர' என்னும், 'அஸுர' என்பது 'அஹுர' என்றும் மாறுகின்றது. கிழக்கு பிரதேசங்களில் நாம் 'அஸம' என்று சொல்கின்ற சொல் 'அஹோம' என்று உச்சரிக்கப்படுகிறது. இந்த வகையில் 'ஸங்க' என்பது 'ஹங்க' என்று ஆகிறது. எனவே 'ஸிந்து' என்பது 'ஹிந்து' ஆனது இயல்பானதே. 'ஸிந்து' என்பது எவ்வளவு தொன்மையானதோ, அவ்வளவு தொன்மையானது 'ஹிந்து' என்பதும்.

சிலர் குறிப்பாக, அயல்நாட்டவர்கள், ஹிந்து சமுதாயத்தினிடையே நிலவும் பல்வேறு நம்பிக்கைகள், வழிபடுமுறைகள், ஜாதிகள், சம்பிரதாயங்கள், மொழிகள், பழக்க வழக்கங்கள் ஆகியவைகளில் வேறுபாடுகளை கண்டு வியப்படைகிறார்கள். இவ்விதம் வேறுபாடுகளுடன் கூடிய ஒரு சமூகத்தை எவ்வாறு ஒரே சமுதாயம் என்று கூற இயலும்? நீங்கள் 'ஹிந்து' என்று கூறும் ஒருமித்த வாழ்க்கைமுறை எங்கே என வினவுகின்றனர்.

இந்த கேள்விக்கு விடையளிக்கையில் ஸ்ரீகுருஜி. ''இந்த கேள்வி ஹிந்து வாழ்க்கையின் வெளிப்புறத் தோற்றத்திலிருந்து உண்டானது. எடுத்துக்காட்டாக ஒரு மரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் கிளைகள், இலைகள், மலர்கள், பழங்கள் என வேறுபட்ட பல பாகங்கள் உள்ளன. மரத்தின் தண்டில் கிளைகள் உள்ளன. கிளைகளில் இலைகள் உள்ளன. இவைகள் அனைத்துமே ஒன்றிலிருந்து ஒன்று முற்றிலும் மாறுபட்டவை. ஆயினும், 'மரத்தின் விதவித காட்சிகள் அனைத்தும் வெளித்தோற்றமே. மரத்தின் அனைத்து அங்கங்களையும் ஊட்டி வளர்க்கும் ஜீவரஸம் ஒன்றுதான்' என்பதை நாம் நன்கு அறிவோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நமது சமுதாயத்தில் நிலவுகின்ற வேறுபாடுகளும் அத்தகையதே. எவ்வாறு மரத்தில் பூ பூப்பதும் இலை துளிர்ப்பதும் மரத்தை பிளவுபடுத்துவதில்லையோ, அது போன்று ஹிந்து சமுதாயத்தில் காணப்படும் வேறுபாடுகள் சமுதாயத்தை பிளக்க முடியாது. இயற்கையான இந்த வளர்ச்சி நமது சமுதாய ஜீவனின் ஈடிணையற்ற வடிவம்.''

ஸ்ரீகுருஜி மேலும் கூறுகிறார், ''வேற்றுமையில் ஒற்றுமை என்ற நமது சிறப்பம்சம், அறிவுத்துறையிலும் ஆன்மிகத் துறையிலும், அனைத்துத் துறைகளிலுமே வெளிப்படுவது. இது பல வண்ண ஜவாலைகளைக் கொண்ட புனிதமான தீபத்திற்கு ஒப்பாகும். அதனுள்ளிருக்கும் ஒளி, காண்பவர்களின் கண்ணோட்டத்திற்கு ஏற்றவாறு விதவிதமாக

வண்ணங்களோடும், நிழல்களோடும் வெளிப்படுகின்றது. இதைப் பார்த்து சிலர் நமது சமுதாயம் ஒரே சமுதாயம் அல்ல, ஒரே ராஷ்ட்ரம் அல்ல, பல தேசங்கள் சேர்ந்த துணைக்கண்டம் என்று பேசுகிறார்கள். நமது சமுதாயம் குறித்த உண்மையான மதிப்பீட்டை நாம் நன்கு புரிந்து கொண்டால், இன்றுள்ள நோய்களையும் ஆராய்ந்தறிய முடியும்; அவற்றின் சிகிச்சைக்கு உரிய உத்திகளை வகுக்கவும் முடியும்''.

ஹிந்து சமுதாயத்தில் வேறுபாடுகளையும், பிரிவுகளையும் ஏற்படுத்துவதையே தனது வாழ்க்கையின் குறிக்கோளாக கொண்டுள்ள சிலர், எதையாவது சாக்குவைத்து கசப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். எடுத்துக்காட்டாக வடபாரதத்திலும், தென்பாரதத்திலும் காணப்படும் வேறுபாடுகள். இது தொடர்பாக ஸ்ரீகுருஜி கூறுவதாவது, ''தேசம் முழுவதிலும், வட பாரதத்தின் ஒவ்வொரு மூலையிலும் கூட நிலவுகின்ற அனைத்து ஆன்மிக சித்தாந்தங்களும் தென்பாரதத்தில் பிறந்த, சிறந்த ஆசாரியர்களின் மூலம் நிறுவப்பட்டவையே. ஈடிணையற்ற அத்வைதத்தை தோற்றுவித்த சங்கரர், விசிஷ்டாத்வைத பக்திநெறி கண்ட ராமானுஜர், ஜீவாத்மா பரமாத்மா தொடர்பான சிறந்த த்வைதம் அருளிய மத்வாச்சாரியர், உலகம் கடவுளின் பரமானந்த சொரூபம் என்று போற்றும் வல்லபாசாரியர் ஆகிய அனைவரும் தென்பாரதத்தை சேர்ந்தவர்கள். (அப்படியானால் தெற்கிலுள்ளவர்கள் அத்வைதம், த்வைதம் என்று சமய சித்தாந்த ரீதியில் தேசம் முழுவதும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று சொல்வதா? அது எவ்வளவு அபத்தமானது! நமது தலையே நமது கால் மீது ஆதிக்கம் செலுத்துகிறதா? இரண்டுமே சரீரத்தின் முக்கியமான அங்கங்களல்லவா?''

ஸ்ரீ குருஜிக்கு மிகுந்த வருத்தம் ஏற்படுத்திய விஷயம் இது: ''எங்கும் வியாபித்த தர்மத்தைக் குறிக்கும் 'ஹிந்து' என்ற சொல் இன்று பெருமிதம் இழந்துவிட்டது. மக்கள் 'ஹிந்து' என்று கூறிக்கொள்வதற்கு வெட்கப்படுகிறார்கள். ஒளிவீசும் முத்துக்களைக் கோர்த்திணைத்த அந்த பொன் இழை அறுபட்டு விட்டது. சமய சம்பிரதாயங்களும் தனிப்பெயரில் மட்டுமே பெருமை கொள்கின்றன. 'ஹிந்து' என்று அழைக்கப்படுவதை எதிர்க்கின்றன. சீக்கியர்கள், ஜைனர்கள், லிங்காயத் ஆர்ய சமாஜத்தினர் தாங்கள், ஹிந்துக்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்று அறிவிக்கிறார்கள். என்ன விந்தை இது!



''உண்மையில் 'ஹிந்து' என்னும் சொல் ஜாதியைக் குறிப்பதல்ல. ஒரு சம்பிரதாயத்தை குறிக்கும் சொல்லுமல்ல. தொன்றுதொட்டு, இந்த சமுதாயம் எத்தனையோ சம்பிரதாயங்களுக்கு பிறப்பளித்திருக்கிறது. சமுதாயம் ஊட்டம் போற்றதெல்லாம் ஒரே வேரிலிருந்துதான். இவ்வாறு உருவானதுதான் ஹிந்து சமுதாயம். இங்கு பல அரசர்கள் இருந்தனர், ராஜ்ஜியங்கள் இருந்தன, சம்பிரதாயங்கள் இருந்தன, ஏற்றத்தாழ்வு, வேறுபாடுகள் எல்லாம் இருந்தன. ஆயினும் கலாசாரம் ஒன்றுதான். ஓரிழையில் பிணைந்த வாழ்க்கை நடைமுறை நிலவுகிறது!''

அனைத்து சமயங்கள், சம்பிரதாயங்கள் பற்றி விவாதித்த பின், அவைகளின் சாரமாக ஸ்ரீகுருஜி, ''நமது ராஷ்ட்ரத்தை எல்லாத் துறைகளிலும் நாம் முன்னேற்ற வேண்டும் என்றால் ஹிந்து தர்மம், ஹிந்து கலாசாரம், ஹிந்து சமுதாயம் ஆகியவற்றைக் காப்பாற்றுவதன் மூலமே அது சாத்தியம். இதை ஆணித்தரமாக எடுத்துச் சொல்லத்தவறினால் நமது 'ராஷ்ட்ரம்' என்ற முறையில் எதுவும் மிஞ்சாது. கால் ஜீவன்களின் கூட்டம் மட்டுமே மிஞ்சும். 'ராஷ்ட்ரம்' என்றதும் நமது அலாதித்தன்மையின் ஒட்டுமொத்த தோற்றம் புலப்படும். அதற்கு ஆதாரம் 'ஹிந்து'. நாம் இதில் மேலும் உறுதிகாட்டிவர வேண்டும். எவருக்கேனும் இது குறித்து சந்தேகம் எழுமேயானால், அவரது பேச்சில் சக்தி இருக்காது. அவர் பேச்சில் மக்களுக்கு ஈர்ப்பும் இருக்காது.

எனவே, 'நாம் 'ஹிந்துக்கள்; இது நமது தர்மம், கலாசாரம், சமுதாயம். இவைகளிலிருந்து உருவானதுதான் நமது ராஷ்ட்ரம்; இந்த சமுதாயம் மகத்தான, தெய்வீகமான, சுதந்திரமான, வலுவார்ந்த வாழ்க்கை வாழ்வதன் பொருட்டே நாம் பிறவி எடுத்திருக்கிறோம்' என்று திட்டவட்டமாகக் கூறுவோம்.''

## அத்தியாயம் - 6

# ஹிந்து ராஷ்ட்ரமும், சிறுபான்மையினரும்

'ஹிந்து ராஷ்ட்ரம்' என்று சொன்னவுடனே 'சிறுபான்மையினர் என்ன ஆவது?' என்று கேட்கிறார்கள். நமது தேசத்தின் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையுமே சிறுபான்மையினர் என்று குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு கேள்வி எழுப்புபவர்களிடம், சிறுபான்மையினர் என்றால் என்ன பொருள் என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். இங்கு வசிக்கும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களில் 99 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் இங்கு தோன்றியவர்களே. அப்படியிருக்க அவர்களை சிறுபான்மையினர் என்பது எப்படி?

மதம், வழிபாட்டு முறை இவற்றை மாற்றிக் கொள்வதால் மட்டுமே ஒரு தனி மனிதனோ அல்லது மனிதர்களின் கூட்டமோ 'சிறுபான்மை' ஆகிவிடமுடியுமா? உண்மையில் நமது தேசத்தில் பார்சிகளும், யூதர்களுமே சிறுபான்மையினர். அவர்கள் வேறு தேசத்திலிருந்து இங்கு புலம் பெயர்ந்தவர்கள். ஆயினும் அவர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. அவர்கள் கோரிக்கை எதையும் விடுக்கவில்லை. முஸ்லிம்கள் கோரிக்கை எழுப்பினார்கள். தேசப் பிரிவினையை அதாவது பாகிஸ்தான் உருவாவதற்கு நமது அரசியல் தலைவர்கள் இணங்கினார்கள் என்பதால் அதே முறையில் கோரிக்கை விடுத்து மேலும் சிலவற்றை பெறலாம் என முஸ்லிம்கள் எண்ணுகின்றார்கள். பிரிவினை வாதத்தை வளர்த்து, தங்களது எண்ணிக்கையைப் பெருக்கி, ஒரு பாகிஸ்தான் பெற்றதுபோல மேலும் ஒரு பாகிஸ்தானை உருவாக்க நினைக்கிறார்கள். கிறிஸ்தவர்களும், பாகிஸ்தான் பாணியில் கிறிஸ்தவ ராஜ்ஜியத்தை தோற்றுவிக்க முடியும் என எண்ணுகிறார்கள். எனவேதான் வட கிழக்கு மாநிலங்களில் கிறிஸ்தவர்கள் அதிகமாக உள்ள இடங்களில் கலகம் நடக்கிறது. இதெல்லாம் அரசியல் பிரச்சினைகளாய் இருக்கலாம். ஆனால் இவை, தேசியத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஸ்ரீகுருஜி தேசியத்தை மையமாக வைத்துக் கொண்டு முஸ்லிம்கள் குறித்து சிந்தித்தார். அவர் கூறுவதாவது



''ஹிந்து ராஷ்ட்ரம் என்ற சொல்லை உச்சரித்த மாத்திரத்திலேயே, 'இங்கு வாழும் முஸ்லிம், கிறிஸ்தவர்கள் குறித்து நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்'' என சிலர் கேள்வி எழுப்புகின்றனர். அவர்களும் இங்கு தோன்றியவர்கள்தானே? அவர்கள் இங்கு ஊட்டி வளர்க்கப்படவில்லையா? அவர்கள் வழிபாட்டு முறையை மாற்றிக் கொண்டதாலேயே அன்னியராகியது எப்படி? அவர்கள் இந்த பூமியைச் சேர்ந்தவர்கள் என்பது அவர்களுக்கு நினைவிருக்கிறதா என்பதுதான் மிக முக்கியமான கேள்வி. நாம் மட்டுமே இதை நினைவில் கொள்வதால் லாபமென்ன? இதை அவர்களுக்கு நினைவு படுத்த வேண்டும்.

வழிபாட்டு முறையை மாற்றிக் கொள்ளும் எவரும் இந்த மண்ணின் புதல்வர் இல்லை என்று கூறும் அளவிற்கு நாம் கொடியவர்கள் அல்ல. கடவுளை எந்த பெயரிட்டு அழைத்தாலும் நமக்கு அதில் ஆட்சேபணை இல்லை. சங்கத்தை சேர்ந்த நாம் முற்றிலும் ஹிந்துக்கள். எனவே, நாம் அனைத்து சமயங்களையும், அனைத்து வழிமுறைகளையும் மதிக்கிறோம். எவர்கள் மற்ற சமயங்களை சகித்துக் கொள்ள முடியாதவர்கள் ஒருபோதும் ஹிந்துக்களாக முடியாது.

ஆனால், இப்பொழுது நம்முன் எழுப்பப்பட்ட கேள்வி, அவர்கள் முஸ்லிம்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் ஆகியுள்ளவர்களின் நிலை என்ன? சந்தேகத்திற்கு இடமின்றி அவர்களும் இந்த தேசத்தில் பிறந்தவர்கள்தான். இருந்தாலும், அவர்கள் இதற்கு உண்மை உள்ளவர்களாகி இருக்கிறார்களா? இந்த மண்ணிற்கு கடன்பட்டவர்களாக இருக்கின்றார்களா? அவர்களை ஊட்டி வளர்த்த இந்த தேசத்திடம் நன்றி உடையவர்களாக இருக்கிறார்களா? இந்த தேசத்திற்கும், பாரம்பரியத்திற்கும் சொந்தக்காரர்களாக உணர்கிறார்களா? அவற்றுக்கு சேவை செய்வதை பாக்கியமாக நினைக்கின்றார்களா? தேசத்திற்கு சேவை செய்வதை கடமையாக நினைக்கின்றார்களா? இல்லை. மதம் (வழிபடு முறை) மாறியவுடன், தேசத்தின் மீது அவர்களுக்கு இருந்த பாசமும், பக்தியும் அற்றுவிட்டன. முஸ்லிம்கள், முன்பு பரம்பரையாக வந்த தேசியத் தொடர்பான அனைத்து பிணைப்புகளையும் அறுத்தெறிந்து, மனதளவில் படையெடுப்பாளர்களுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு விட்டார்கள். இது மதம் (வழிபடு முறை) மாற்றத்தை மட்டும்

ஏற்படுத்தாமல், தேசியத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.''

வேறொரு இடத்தில் ஸ்ரீகுருஜி கூறுகிறார்: ''இங்கு வாழும் ஹிந்து அல்லாதவர்களுக்கும், தேசிய கடமை அதாவது தேசத்தின் மீது பொறுப்பு, சமுதாயக் கடமை அதாவது சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய செயல்கள், குலக்கடமை அதாவது அவர்களின் மூதாதையர்களுக்கு ஆற்ற வேண்டிய செயல்கள் ஆகியவை உண்டு. ஆன்ம நாட்டத்தால் எந்த ஒரு மதத்தையோ, வழிபடுமுறையையோ தேர்ந்தெடுத்துக் கொள்ளத்தான் தனிநபருக்கு உரிமை உண்டு.

(ஞானகங்கையிலிருந்து)

மற்றொரு கேள்விக்கு பதிலளிக்கையில் ஸ்ரீ குருஜி கூறுகிறார்: ''கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், ஹிந்துக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று ஹிந்துக்கள் தான் கூறுகின்றனரேயன்றி, கிறிஸ்தவர்களோ, முஸ்லிம்களோ கூறுவதில்லை. எந்தவொரு வழிபடு முறையிலும் நமக்கு வெறுப்பு இல்லை. ஆனால், தேசத்திற்கு விரோதமான செயலை செய்வோர். சொந்த மகனானாலும் அவர்களிடத்தில் நடந்துகொள்வது. அகல்யாபாய், சத்ரபதி சிவாஜி நடந்து கொண்டது போன்று அமைய வேண்டும். தேச விரோதிகள், வேறு மதத்தை சேர்ந்தோர் ஆனாலும் அவர்களையும் இதேபோலத்தான் நடத்த வேண்டும் என்று கூறுவதில் நமக்குத் தயக்கம் தேவையில்லை''

(டாணே ஊழியர் வகுப்பில் கேள்வி - பதில்)

இதுவரை விளக்கியுள்ளதில் ஸ்ரீ குருஜிக்கு 'ராஷ்ட்ரம்' குறித்து எத்தகைய எண்ணம் இருந்தது என்பது தெளிவாகிறது. இன்று அமெரிக்காவில், சாமுவேல் ஹண்டிங்டன் எழுதிய 'நாம் யார்' என்ற நூல் குறித்து விவாதம் நடைபெற்று வருகிறது. 'ஆங்கிலோ பிராட்டஸ்டன்ட்' கலாசாரமே அமெரிக்கா தேசியத்தின் அடிப்படை என்ற கருத்தை பேராசிரியர் ஹண்டிங்டன் வெளிப்படுத்தியிருக்கிறார். அதனை அமெரிக்கா ஒரு பொழுதும் விடுவதாயில்லை என்கிறார். ஹிந்து கலாசாரமே தேசிய வாழ்வின் அடிப்படை என்பதையும் அதை ஒருபோதும் நாம் விட்டுவிடக் கூடாது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை நாம் விட்டுவிட்டால் நமது ஜீவனும், அடையாளமுமே அற்றுவிடும்.

★★★



## மா.கோ.வைத்ய

மா.கோ.வைத்ய என்று சுருக்கமாக அழைக்கப்படும் திரு. மாதவ கோவிந்த வைத்ய நாகபுரியில் உள்ள ஹிஸ்லாப் கல்லூரியில் சம்ஸ்க்ருத பேராசிரியராக பணியாற்றியவர். 'தருண் பாரத்' என்ற மராட்டி தினசரி பத்திரிகையின் ஆசிரியராக இருபது ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றியவர்.

ஆர்.எஸ்.எஸ்ஸில் அகில பாரத பௌத்திக் ப்ரமுக், அகில பாரத ப்ரச்சார் ப்ரமுக், அகில பாரத செய்தி தொடர்பாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தற்போது ஆர்.எஸ்.எஸ்ஸின் அகில பாரத செயற்குழுவின் விசேஷ அழைப்பாளராக இருக்கும் மா.கோ.வைத்ய ஒரு சிறந்த சிந்தனையாளர். எழுத்தாளர். பத்திரிகையாளர்.